தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக**

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 10 ஜுன் 2010 கனி 7

# யோர்தான்
# The Jordan



1. இது பாலஸ்தீன நாட்டின் மிகப்பெரிய நதி.
2. லெபனானுக்கும் எர்மோனுக்கும் இடையேயுள்ள பள்ளத்தாக்கிலுள்ள இரு நீரூற்றுகளிலிருந்து புறப்படுகிறது.
3. மேல் நீரூற்று ஹேஸ்பனி எனப்படுவதாகும்.
4. இது பள்ளத்தாக்கினூடே பல மைல்கள் ஓடினபின்பு மேரோம் அல்லது ஹீயூலே என்ற ஏரியை வந்தடைகிறது.
5. அதன்பின் 12 மைலுக்குமேல் ஓடி கலிலேயா கடலை வந்தடைகிறது.
6. யோர்தானின் முழு நீளம் 120 மைல்கள் மட்டுமே.
7. கலிலேயா கடலின் வடக்குப்பகுதி எல் -யூர்டான் என அழைக்கப்படுகிறது.
8. இதன் உப்புக்கடலுக்கு தென் பகுதி எஸ் -ரியாட் என அழைக்கப்படுகிறது.
9. இஸ்ரவேலர் மற்றும் எலியா இதனை கி.மு 1451-ல் கடந்து சென்றனர்.

## கிறிஸ்துவின் வசனம்



வழங்கும்


தொலைக்காட்சி நிகழ்ச்சி



தமிழன் TV யில் திங்கள் காலை 6.00-6.15
இமயம் TV யில் புதன் காலை 6.30-6.45

ரேடியோ நிகழ்ச்சி

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்





Website: www.thewordofchristindia.com

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்

*THE WORD OF CHRIST*

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 10 ஜூன் - 2010 கனி - 7


ஆசிரியருரை

## பரிசேயன் வீட்டில் கர்த்தர்

## The Lord Was In Pharisee's House



ஆண்டவர் இயேசு இப்பூமியில் தம்மை ஏற்றுக்கொண்ட எல்லா இடங்களுக்கும் சென்றார் என நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும் படிக்கின்றோம். பரிசேயர்கள் தங்களை நீதிமான்களாக எண்ணக்கூடியவர்கள். இயேசுவின் உபதேசத்தில் குற்றம் பிடிக்கிறவர்கள். ஆகையால் பரிசேயர்களுடைய உபதேசத்தை கர்த்தர் புளித்தமாவோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். இவர்கள் மோசேயினுடைய சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொள்ளுங்கள், அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள். ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள் சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறதை நாம் மத்.23:2-ம் வசனத்தில் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட பரிசேயனுடைய அழைப்பை ஏற்று ஒரு முறை கர்த்தர் அவனுடைய வீட்டில் பந்தியிருந்தார் என லூக்.7:36-ம் வசனத்தில் படிக்கிறோம். பரிசேயர்கள் யார்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? என்பதை அறிந்தும் அவர் அவனுடைய அழைப்பை ஏற்றார். கர்த்தர் ஒருவரையும் புறம்பே தள்ளாதவர் அல்லவா? ஆகையால், பரிசேயனுடைய அழைப்பை ஏற்று அவன் வீட்டிற்குச் சென்றார். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு; கதவைத் திறந்தால், அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" என்கிறார் (வெளி.3:20). ஆண்டவருடைய சத்தம்கேட்டு இருதய கதவை யார் திறக்கிறார்களோ அவர்களோடே கர்த்தர் போஜனம்பண்ணும்படியாக வருவார். இன்று நீங்கள் கர்த்தருடைய சத்தம்கேட்பீர்களானால், உங்களுடைய இருதயத்தை தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவின் சத்தத்திற்கு செவிகொடுங்கள். அவர் உங்களோடு வந்து

போஜனம்பண்ணுவார். பரிசேயனுடைய அழைப்பை ஏற்று அவனுடைய வீட்டிற்குச் சென்ற இயேசுகிறிஸ்து உங்களுடைய அழைப்பையும் ஏற்றுக்கொள்வார்.

இயேசுவானவர் பரிசேயனுடைய வீட்டில் பந்தியிருக்கும்போது; "பாவியாகிய ஒரு ஸ்திரீ ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்" (லூக்.7:37,38). இந்த பாவியாகிய ஸ்திரீ பரிசேயனுடைய வீட்டிற்கு மற்ற நாட்களில் வந்திருக்க முடியாது. ஏனெனில் அவன் இவளை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டான். பரிசேயர்கள் தங்களை நீதிமான்களென்றும் மற்றவர்களை பாவிகள் என்றும் கருதக்கூடியவர்கள். இயேசுவானவர் பரிசேயனுடைய வீட்டில் இருந்தபடியால் இவள் துணிந்து பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்தாள் என அறிகிறோம். பரிசேயனுடைய வீட்டிற்குள் பிரவேசித்த இவள் பரிசேயனையோ, மற்றவர்களையோ சந்திக்காமல் இயேசுவின் பின்னாக வந்து, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் பாவங்களை கண்ணீரால் சொல்லி அறிக்கையிட்டு, அவருடைய பாதத்தை முத்தஞ்செய்தாள். அப்போஸ்தலனாகிய யோவான் இப்படியாக எழுதுகிறார்; "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1யோவா.1:9). மேலும், பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் என்ற வசனத்திற்கேற்ப இவள் இயேசுவின் சமூகத்தில் தன்னுடைய பாவங்களை கண்ணீரால் அறிக்கையிட்டாள்.

இச்சம்பவத்தை பார்த்துக்கொண்டிருந்த அந்த வீட்டு பரிசேயன் தனக்குள்ளே முறுமுறுத்து இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அநேகர் இவ்விதமாகத்தான் மற்றவர்களைப் பார்க்கிறார்கள். கர்த்தர் அவ்விதமாக பார்ப்பாரேயானால் நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என அறிகிறோம். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்" என்று எழுதுகிறார் (1தீமோ.1:15). ஆண்டவர் இயேசு உலகத்தில் வந்ததின் நோக்கமே பாவிகளை இரட்சிக்கவும் பரலோகம் கொண்டுசேர்க்கவுமே. இதை அறியாத சீமோன் என்ற அந்த பரிசேயன் முறுமுறுத்தான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக; "சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும்

என்றார். அதற்கு அவன்; போதகரே, சொல்லும் என்றான். அப்பொழுது அவர்; ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார். சீமோன் பிரதியுத்தரமாக; எவனுக்கு அதிகமாய மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான்; அதற்கு அவர்; சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி, ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி; இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே, நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்; இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது;" என்றார் (லூக்.7:40-48). பரிசேயனிடத்தில் ஒரு சம்பவத்தைச் சொல்லி அவனிடத்திலிருந்தே அதற்கான பதிலை பெற்று அவனை சிந்திக்கும்படியாக வைத்தார். எத்தனை அருமையான காரியம்! நாமும்கூட சிலவேளைகளில் பாவப்பட்ட ஜனங்களைத் தவறாக நினைக்கிறோம். சிலர் அதிகமாக பாவஞ்செய்திருந்தாலும் அவர்கள் தேவனிடத்தில் அதிக அன்பாய் இருக்கும்போது பாவமன்னிப்பைப் பெறுவார்கள். ஆகையால் நாம் செய்யவேண்டு வதென்ன அதிகமாய் தேவனிடத்தில் அன்பு செலுத்தவேண்டும். "நமக்குள் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1யோவா.1:8).

பரிசேயனுடைய வீட்டில் இயேசுவின் பாதத்தில் கண்ணீர் விட்டு, தன்னுடைய மகிமையான கூந்தலால் அவருடைய கால்களைத்துடைத்த அந்த பாவியான ஸ்திரீயின் அன்பு எவ்வளவு பெரிது என்று பார்த்தீர்களா? ஒரு ஸ்திரீக்கு முக்காடாக கொடுக்கப்பட்டிருப்பது அவளுடைய கூந்தல். அதுமட்டுமல்ல ஒரு ஸ்திரீக்கு மகிமையாக இருப்பதும் அவளுடைய தலைமுடிதான். அதை இயேசுவின் கால்களைத் துடைக்க பயன்படுத்தினாள். ஸ்திரீகளுடைய சரீரத்தில் மிக உயர்வாக மதிக்கக்கூடியதும் அவர்களுடைய கூந்தல்தான். ஸ்திரீகளுக்கே மகிமையாக இருக்கிற அவளுடைய கூந்தலினால் பரிசுத்தமான ஆண்டவருடைய கால்களைத் துடைக்க அவள் தயங்கவில்லை. ஆண்டவரை அழைத்த பரிசேயனோ! அவருடைய கால்களை கழுவ தண்ணீர் தரவில்லை, அவரை முத்தஞ்செய்யவில்லை, அவருடைய தலையில் எண்ணெய் பூசவில்லை. இவளோ, இவையெல்லாம் செய்தாள். ஆண்டவரின் மீது எந்த அளவு அன்பு

கொண்டிருந்தால் இப்படி விலையேறப்பெற்ற பரிமள தைலம் வாங்கிக்கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசியிருப்பாள் என்பதை எண்ணிப்பாருங்கள். நீங்கள் இயேசுவின் மீது அன்புள்ளவர்களாயிருக்கிறீர்களா? அப்படியானால் இயேசுவுக்காக இதுவரை நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? அவர் உங்களுடைய பாவங்களை மன்னிக்கும்படியாக சிலுவையில் தன்னுயிரை கொடுத்தார். அவருடைய இரத்தத்திற்கு நீங்கள் விலைகொடுக்கமுடியாது பின்பு எதைக்கொடுக்கப்போகிறீர்கள். உங்களுடைய இருதயத்தில் அவருக்கு முதலிடம்கொடுங்கள். பரிமளதைலம் பூசின அந்த ஸ்திரீயானவள் இயேசுவுக்கு முதலிடம் கொடுத்தாள். பரிசேயன் வீட்டில் எத்தனைபேர் இருந்தார்களோ நாம் அறியோம் ஆனால் இயேசுவுக்கு அவள் பரிமளதைலம் கொண்டு சென்று பூசினாள். வசதிபடைத்த அந்த பரிசேயன் செய்யாத காரியத்தை இவள் செய்து இயேசுவின் அன்பை பெற்று பாவமன்னிப்பின் நிச்சயத்தைப்பெற்றாள். அழைத்த பரிசேயன் அவருக்கு, சரீரத்திற்கு வேண்டிய உணவுதான் கொடுக்கமுடிந்தது. அவரை தொடவும், அவர் கொடுக்கும் பாவமன்னிப்பையும் அவனால் பெறமுடியாமறபோனது. ஆனால் நடந்தது என்ன? அழைக்கப்படாத பாவியாகிய ஸ்திரீ, இயேசு பரிசேயனுடைய வீட்டில் பந்தியிருக்கிறார் என்பதை அறிந்து அவருக்கு பரிமளதைலம் வாங்கி வந்து, அவருடைய பாதங்களில் பூசி, தன்னுடைய பாவங்களை நினைத்து பரிசுத்தரின் பாதங்களை தொட கிடைத்த பாக்கியத்தை எண்ணி அழுது, தன்பாவங்களை கண்ணீராக ஊற்றி, அவரிடத்திலிருந்து பாவமன்னிப்பைப்பெற்றாள். ஆகையால், ஆண்டவர் இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான் என்று சொல்லி; "அவளை நோக்கி; உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்".

"அப்பொழுது கூடப் பந்தியிருந்தவர்கள்: பாவங்களை மன்னிக்கிற இவன் யார் என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்" (லூக்.7:49). ஆனால், பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை அறியவேண்டுமென்று சொல்லி திமிர்வாதக்காரனை சுகப்படுத்தியதை நாம் லூக்.5:24,25 வசனங்களில் வாசிக்கிறோம். இச்செய்தியைக் கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட அவரில் அன்பு கூர்ந்து அவர் கட்டளைகளைக் கைக்கொள்.

**பாவியாகிய அந்த ஸ்திரீயின் பாவங்கள் எப்படி மன்னிக்கப்பட்டது?**

ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் அவளுடைய விசுவாசமே அவளுடைய பாவத்தை நீக்கியது. அதைத்தான் இயேசு இறுதியில் சொன்னார். "அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்" (லூக்.7:50). முதலாவது, அவள் பாவங்களை மன்னிக்கும் இயேசுவிடம் வந்தாள். இரண்டாவது, அவள் இயேசுவின் பாதங்களை

பிடித்துக்கொண்டு கண்ணீரால் நனைத்தாள். அதாவது தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்தாள். மூன்றாவது இயேசுவானவர் அவளை அனுப்பும் வரை விசுவாசத்துடன் அவரை விட்டு செல்லாமலிருந்தாள். அதுதான் அவளுடைய நம்பிக்கை. இந்த நம்பிக்கையை உடையவளாக இருந்தபடியால் இயேசு அவளை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது சமாதானத்தோடே போ என்றார். அழைத்த பரிசேயனுக்கு சமாதானம் கிடைத்ததா? அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதா? இல்லை. ஆனால் ஆண்டவர் இருக்கும் இடம்தேடி வந்த பாவிக்கு, இவை இரண்டும் கிடைத்தது. நீங்கள் பாவமன்னிப்பைப் பெற இயேசுவண்டைவந்து, பரிசேயர்களைப்போல கேள்விகளைக்கேட்டு, காலத்தை வீணாக்காமல் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு, பரிசுத்தவான்களாக மாறுங்கள். நாங்கள் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம்.

**வேதஅறிவுப்போட்டி எண் 117-ல் வெற்றி பெற்றவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| Mrs.செல்வி ரேணுகா | -தென்காசி | G.பூங்கோதை | -வெல்லபாளை |
| Sis.ஜாய்மேரி | -திண்டுக்கல் | B.மோகன் | -குமாரபாளையம் |
| J.ஐசக் | -திருநெல்வேலி | Mrs.மரகதம்திரவியம் | -கோம்பை |
| A.ரெபேக்காள் | -நாகமலை | N.கமலவேணி | -சென்னை |
| Mrs.மெல்சிடா | -திண்டுக்கல் | Bro. ஷர்லோ | -புதுவை |
| Sis.ஜாய் வாசுகி | -கோவை | | |

**வேதஅறிவுப்போட்டி எண் 117-ன் விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. எஸ்றா | -எஸ்.7:21 | 6. தான் தாழ்த்தப் பட்டதைக்குறித்து | -யாக்.1:10 |
| 2. சுயாதீனத்தை | -2பேது.2:19 | 7. வானங்களில் | -சங்.103:19 |
| 3. யோசபாத் | -2நாளா.19:11 | 8. பாளையத்துக்கு | -எபி.13:13 |
| 4. கீழ்ப்படிந்திருங்கள் | -1பேது.2:18 | 9. சோம்பேறியை | -நீதி.6:6 |
| 5. தாவீதின் நகரம் | -1நாளா.11:7 | 10. பவுலுக்கு | -பிலே.1:1 |


## நடப்புச் செய்திகள்

1. தட்கல் பாஸ்போர்ட் ஒரே நாளில் பெறலாம் என்று மத்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்
2. சிபிஎஸ்இ பாடத்திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்புபடித்த மாணவர்கள், மாநில பாடத்திட்டத்தின் கீழ் பிளஸ் 2 படிக்க விரும்பினால் அவர்களை பள்ளிகளில் சேர்க்கவேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
3. டிரினிடாட் அண்ட் டொபாகோ நாட்டின் முதல் பெண் பிரதமராக இந்திய வம்சாவளியை சேர்ந்த கமலா பிரசாத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார்.
4. அன்னை தெரசாவின் தபால்தலை வெளியிட மத்திய அரசு முடிவுசெய்துள்ளது.

# இரட்சிக்கப்பட ஏன் சிறந்த நீதியுள்ள வாழ்க்கை மட்டும் போதாதது

## Why Good Moral Living Alone Is Not Enough To Save

J.C.Choate



நீங்கள் இதை உணர்ந்தாலும் உணராவிட்டாலும் அதிகமான ஜனங்கள் இரட்சிக்கப்பட தங்களுடைய சுய நற்கிரியையின் அடிப்படையில் முயற்சிக்கின்றபடியினால் அநேகமாக இழந்து போனவர்களாய் இருப்பார்கள். நித்திய ஜீவனை தேடி இயேசுவினிடம் வந்த ஒரு வாலிபனுடைய சம்பவம் இதை நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் வாசிக்கலாம் "அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி; நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு கொலை செய்யாதிருப்பாயாக; விபசாரஞ்செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு; நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் போய் உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். (மத்.19:16-22).

முந்தைய கால சம்பவம் பழைய ஏற்பாட்டு சட்டத்தின் அடிப்படையில் நடந்தவையாகும். வேறொரு வகையில் அச்சமயச் சட்டம் தொடர்ந்து கட்டுப்படுத்திக்கொண்டிருந்தது ஆனபடியால் இயேசு அந்த பழைய சட்டம் கூறுகிறபடி இந்த மனிதனுக்குப் பதிலளித்தார். அவன் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள விரும்பினால் அவன் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டுமென பத்துக்கற்பனைகளை அறிந்தவனாக இயேசுவின் விளக்கத்தை கேள்விப்படுகையில் அவன் தன்னுடைய சிறுவயது முதலே அவைகளைக் கைக்கொண்டு வருவதாக பதிலளித்தான். நாம் இதைக் குறித்து சிந்திக்கையில் அந்த கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டுவருவதினால் அவன் ஒரு சிறந்த நீதியுள்ள மனிதன் அல்லது வேறுவகையில் சிந்திப்போமானால் எந்த வழியிலும்

அவன் ஒரு துன்மார்க்கன் அல்லது ஒரு கெட்ட மனிதனல்ல என அறிந்துகொள்ளலாம். இதுவே அவன் பரலோகத்திற்குச் செல்ல போதுமானது என நினைத்தான், எனவே கர்த்தருடைய அனுமதியை மட்டும் பெற்றுக்கொள்ள விரும்பினான் ஆனால் இச்சம்பவத்தில் இது போதுமானதல்ல இயேசுவோ அவனுடைய உள்ளிந்திரியங்களையும், அவனுடைய ஜீவியத்தையும் கண்டுகொண்டவராக அங்கே ஒரு தடையிருப்பதையும் காண்கிறார். இது அவன் ஒரு பணக்காரன் என்பதைக் காட்டுகிறது. எனவே அவன் தன்னுடைய நம்பிக்கையை தன்னுடைய ஐசுவரியத்தின் மேல் வைத்துக்கொண்டிருந்தான். ஆனபடியினால் இயேசு அவனுக்குள்ள எல்லாவற்றையும் விற்று, தரித்திரருக்குக் கொடுக்க வேண்டுமென அவனிடம் சொன்னார். அதன்பின் நாம் ஒரு துக்ககரமான கூற்றினைப் பெறுகிறோம். வேதவாக்கியம் கூறுகிறது. அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் அதைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய் போய்விட்டான். ஒரு சிறந்த நீதியுள்ள வாழ்வு ஒருவனை இரட்சிக்கப் போதுமானதல்ல.

கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரைப்பற்றிய சம்பவத்தில் ஒரு சிறந்த மாதிரியை நாம் பெற்றுள்ளோம். கொர்நேலியு என்பவன் ஒரு புறஜாதியான் அவன் பட்டாளத்திலே ஒரு பொறுப்புள்ள பதவியில் இருந்த ஒரு மனிதன்; அதாவது அவன் நூற்றுக்கதிபதியாக இருந்தான். வேதமும் அவனைப் பற்றி இவ்வாறாகக்கூறுகிறது: அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்" (அப்.10:2)., இருந்த போதிலும் அவன் ஒரு இழந்துபோன மனிதனாக இருந்தான். கர்த்தருடைய இடைபடுதல் மூலம் கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரனைவரும் மற்றும் பேதுருவும் அவனுடைய சகோதரர்களும் அங்கே கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். அந்தத் திருப்புமுனையில் பேதுரு அவர்களுக்குப் பிரசங்கித்தான் மேலும் வேதவாக்கியம் சுவிசேஷம் யூதர்களுக்கு அருளப்பட்டதுபோல புறஜாதியாருக்கும் அருளப்பட்டுள்ளது என்பதை யூதர்கள் நம்பத்தக்கதாக இவர்கள் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது என்று கூறுகிறது. "அப்பொழுது பேதுரு நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்" (அப்.10:47,48). இப்போது கொர்நேலியு வாழ்ந்து வந்த விதத்தைக் குறித்து குறிப்பெடுப்பீர்களென்றால் இன்றும் கூட எந்த மனிதனும் அவன் ஒரு தேவபக்தியுள்ள மனிதன், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்தவன், ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்தவன், எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தவன், பார்வைக்கு இனிமையான நல்ல மனிதன் என பலவாறு வகைப்படுத்தப்பட்டிருப்பான் என்பதை நீங்கள் காணலாம். இருந்தபோதிலும் கொர்நேலியு ஒரு இழந்துபோன மனிதனாக

இருந்தான். ஆனபடியினால் சுவிசேஷத்தைக் கேள்விப்படுவதும் அதை விசுவாசிப்பதும் அவன் இரட்சிக்கப்படும்படிக்கு அதற்குக் கீழ்ப்படிவதும் அதன்பின் அவன் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுவதும் அவனுக்கு அவசியமாயிருந்தது. இதையெல்லாம் செய்வதற்கு அவன் மறுத்தவனாயிருந்தானா? அவன் செய்த எல்லா நற்கிரியைகளை செய்து கொண்டிருந்த போதிலும் அவன் இழந்து போன நிலைமையிலேயே தொடர்ந்திருந்திருப்பான்.

ஒருவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க ஒரு சிறந்த நீதியுள்ள வாழ்வு வாழ வேண்டுமென்பது உண்மைதான். அதன் பொருள் ஒருவன் வெறுமனே கெட்ட மற்றும் தவறான செயல்கள் புரிவதிலிருந்து விலகி இருக்க வேண்டும். இதன் இன்னொரு அர்த்தம் ஒருவன் மாம்சத்தின் கிரியைகளை அல்லது உலகப் பிரகாரமான கிரியைகளைச் செய்யக்கூடாது. கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறிவீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும, சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை." (1கொரி.6:9,10) என்று எழுதினார். அவர்களுடைய உலகப்பிரகாரமான ஐக்கியத்தைக் குறித்து கொரிந்துவிலுள்ள சகோதரருக்குச் சொல்லுகையில் பவுல் "விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன் ஆனாலும் இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர் பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர், இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக்கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப் போகவேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால் சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்கார னாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால் அவனோடே கலந்திருக்கக்கூடாது. அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங்கூடாது" (1கொரி.5:9-11) என்று சொன்னார். இங்கே பவுல் உலகத்தாரோடே எவ்வளவும் பேசி கலந்திராமல் இவ்வாழ்வினை நடத்திச் செல்வது கூடாதகாரியம் என்கிறார். ஆனால் கிறிஸ்துவுக்குள் ஒரு அவிசுவாசமான சகோதரனுக்குள்ளும் ஒரு துன்மார்க்கமான வாழ்வு வாழ்கின்றவனுக்குள்ளும் இக்காரியங்கள் வரும்பொழுது, அப்பேர்பட்ட நபருடன் நாம் ஐக்கியங்கொள்ளக்கூடாது.

பவுல் தொடர்ந்து கலாத்திய சகோதரர்களுக்கு "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள் சண்டைகள், பிரிவினைகள் மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல் இப்பொழுதும்

உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலா.5:19-21) என்கிறார். பவுல் பல்வேறு வேத பகுதிகளில் ஒருவன் இவ்வகையான பாவச்செயல்களுக்கு இஷ்டப்படி இடமளித்து தேவனுடைய ராஜ்யம் அல்லது கர்த்தருடைய சபையில் பிரவேசிக்க முடியாதென கூறுகின்றார். கிறிஸ்தவர்களோ, கிறிஸ்தவர்களல்லாதவரோ ஒருவன் இப்பேர்பட்ட பாவங்களில் ஈடுபட்டுக்கொண்டும் தேவனையும் பிரியப்படுத்த இயலாது. ஒருவன் இப்பேர்பட்ட பாவங்களை செய்கிறதில்லை என்ற அடிப்படையில் மட்டும் இரட்சிக்கப்பட முடியாத வேளையில் ஒருவன் கிறிஸ்தவனாக நிலைத்திருப்பதற்கு அவன் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகவேண்டுமென்று கிறிஸ்து விரும்புகிறார். (1தெச5:22)

கிறிஸ்தவர்கள் மற்ற சமயத்தினரை விட அதிகமான நீதிக்குரிய சுதந்திரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சிலமனிதர்கள் தப்பெண்ணம் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒரு கிறிஸ்தவன் புகைபிடிக்கலாம், மதுபானம் அருந்தலாம், ஒழுக்கங்கெட்ட செயல்களில் ஈடுபடலாம் கெட்டவார்த்தை பேசலாம், ஆபாச உடை அணியலாம் இது போன்ற இன்னும் பலவற்றைச் செய்யலாம் என நினைக்கின்றார்கள். வேதாகமம் என்ன போதிக்கிறது, கிறிஸ்தவர்களாக இருப்பதற்குரிய அர்த்தம் என்ன என்பதை அறிந்தவர்கள் நிச்சயமாக இவ்வாறெல்லாம் செய்யக்கூடாது என அறிவார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகின்ற சிலர் இவ்வாறான செயல்களிலும் தவறான பழக்க வழக்கங்களிலும் ஈடுபடுவது உண்டு என்பது உண்மை, ஆனால் அவ்வாறு செய்வதினால் அவர்கள் தேவனை துக்கப்படுத்திவருகின்றனர். ஒருவன் இரட்சிக்கப்படவும் ஒருவன் கிறிஸ்தவனாயிருக்கவும், தேவனிடத்திலும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் கொண்டிருந்தால் மட்டும் போதாது அவன் தன்னுடைய சகல பாவங்களுக்காகவும் கண்டிப்பாக மனந்திரும்பி அல்லது அவைகளை விட்டு விலகி அவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று ஏற்றுக் கொண்டு அல்லது அறிக்கையிட்டு கடைசியாக தன்னுடைய பாவங்கள் போகக் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். இதை ஒருவன் செய்யும்போது மட்டுமே கர்த்தர் அவனை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்ள மனதுள்ளவராய் இருப்பார். கிறிஸ்தவனாகிய ஒருவன் ஜீவகிரீடத்தை பெறுகிறவனாயிருப்பதால் அவன் மரணம்பரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாயிருக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் அதிகமதிகமாய் மறுபடியும் வேதவாக்கியங்களில் வாசிக்கிறோம் (மாற்.16:15,16; அப்.2:38; மத்.10:32; அப்.2:47; வெளி.2:10)

இப்போது ஒருவன் தன்னுடைய சிறந்த ஜீவியத்தின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என ஒரு சிறந்த நீதியுள்ள மனிதனாகவும் விசுவாசமிக்கவனாகவும் இருக்கலாம், ஆனால் துன்மார்க்கத்தோடே இருப்பதினால், அவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். அவனுடைய நற்கிரியைகள் மட்டும் அவனை இரட்சிக்காது. ஒருவனுடைய சுய நீதியின் கிரியைகள் அவனை இரட்சிக்காது (எபே.2:8,9; தீத்து3:5). ஒருவன் தன்னை இரட்சித்துக்கொள்ள தன்னுடைய சொந்த

நற்கிரியைகளை நம்புகின்றவிஷயத்தில், அவன் அந்த பாவத்திற்காக மனந்திரும்ப வேண்டும். பவுல் நாமெல்லாரும் பாவஞ்செய்திருக்கிறோம் என்கிறார் (ரோம.3:23). ஆனபடியினால் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே கர்த்தர் வந்திருக்கிறார் என வாசிக்கிறோம் (லூக்.19:10). பவுல், கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்றார் (1கொரி.15:1-4). பேதுரு, "ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்"(1பேது.3:18) என்றார்.

என்னுடைய நண்பனே, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? அப்படியானால், நீங்கள் எவ்வாறு இரட்சிக்கப்ட்டீர்கள்? நீங்கள் சிறந்த நீதிக்குரிய வாழ்க்கைவாழ்வதின் மூலம் பரலோகத்திற்குச் செல்ல முயற்சிக்கிற ஒருவராக இருக்கின்றீர்களா? உங்களுடைய நம்பிக்கையை உங்கள் மேலும் உலக ஆஸ்தியின் மேலும் யாரோ ஒரு மனிதன் மேலும், மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்பின் மேலும், அல்லது இவ்வுலகத்தின் வேறு ஏதோ ஒன்றின் மேலும் வைத்துக்கொண்டிருக்கிறீர்களா? பிறகு உங்களுடைய சொந்த உபாயங்களின் மூலம் பரலோகத்திற்குச் செல்ல முயன்று கொண்டிருக்கிறீர்கள். அப்படியானால் உங்களால் இதைச் செய்யமுடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். கிறிஸ்துவினாலன்றி வேறொருவராலும் இரட்சிக்கமுடியாது. நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, மரணபரியந்தம் பரிசுத்தமாக வாழ்ந்து தேவபக்திக்குரிய ஜீவியத்தைச் செய்யும் போது, அவர் உங்களை இரட்சிப்பதாக மாத்திரமல்ல, பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டையும் தருவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். அதைப்பற்றியது தான் வேதமும் கிறிஸ்தவமும்.

நீண்ட காலங்களுக்கு முன் தேவனுடைய தீர்க்கதரிசி ஒரு அடிப்படை உண்மைக் கொள்கையை ஏற்படுத்தினான் அதுவே அன்றும் உண்மையானதாயிருந்தது இன்றும் உண்மையுள்ளதாயிருக்கிறது. அவன், "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே.10:23) என்றான். அதை ஏற்றுக்கொள்ள தாழ்மை அவசியம், ஆனால் ஞானமுள்ளவன் அதை ஏற்றுக்கொள்கிறான்.

மீண்டும், நீங்கள் யாரானாலும், எவ்விதமான ஜீவியத்தைச் செய்கிறவரானாலும், நல்லவரோ அல்லது கெட்டவரோ, நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமானால் தேவனுக்குக் கீழ்ப்படியும்படி உங்களை துரிதப்படுத்த விரும்புகிறேன். நீங்கள் இரட்சிக்கப்பட்டால் மட்டுமே (மாற்.16:16), கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47).

"நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்" – ரோமர்10:10

பெண்கள் பகுதி

# தேவன் ஏன் மனுஷியை ஏன் உண்டாக்கினார்?

## *Why Did God Make Women?*

**-Nancy Wheat**



தேவன் மனுஷியை ஏன் உண்டாக்கினார்? தேவன் எந்த உயிரினங்களையும் நோக்கமில்லாமல் அல்லது காரணமில்லாமல் உண்டாக்கினாரா? நிச்சயமாக இல்லை! நம்முடைய தேவன் ஒரு மாபெரும் சிருஷ்டிகர்; அவர் ஒவ்வொரு சிருஷ்டியையும் ஒரு அற்புதமான நோக்கத்துடன் சிருஷ்டித்திருக்கிறார். ஆகவே, மிக அதிகமாய், மனுஷியானவள் அற்புதமான தெய்வீக நோக்கத்துடன் உருவாக்கப்பட்டாள் இது மனுஷியின் நோக்கம் யாதென நாம் நினைப்பது முக்கியமல்ல. இது எந்தவொரு மனிதனுடைய யோசனை என்னவென்பதும் முக்கியமல்ல. நாம் நிறைவு செய்ய வேண்டிய நோக்கம் தேவனுடைய நோக்கம் என்பதே முக்கியம்.

ஆதியாகமம் இந்த ஆச்சரியமான உலத்தினை தேவன் சிருஷ்டித்த சம்பவத்தைப் பற்றி கூறுகிறது. ஒவ்வொரு தாவரமும், பறக்கும் பறவையும் மிருகமும் இந்த அற்புதமான சிருஷ்டிப்பில் ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தது. மனுஷனுடைய நோக்கம் ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்துவதும் காப்பதுமாகும் (ஆதி.2:15). இது காண்பதற்கு ஒரு குடியானவனுடைய வாழ்க்கையை சித்தரிக்கும் செயலாயிருந்தது, ஆனால் தேவனாகிய கர்த்தர், "........ மனுஷன் தனிமையாயிருப்பது நல்ல தல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). பிறகு தேவனாகிய கர்த்தர் இன்னொரு அற்புதத்தை நிகழ்த்தினார்: அவர் ஆதாமுடைய **"ஏற்றதுணை"** -ஆக மனுஷியை உண்டாக்கினார். தேவனாகிய கர்த்தர் மனுஷியை உண்டாக்கும் வரை மனுஷன் முழுமைபெறவில்லை, சிருஷ்டிப்பு முழுமைபெறவில்லை. அங்கே சிருஷ்டிப்பில் ஒன்றும் மனுஷியைப் போலில்லை. மனுஷியுடைய நோக்கத்தினை வேறு எந்த சிருஷ்டிப்பும் நிறைவு செய்யமுடியாது. "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்" என ஆதியாகமம்2:23,24 கூறுகிறது. இந்தப் பகுதி தொடர்ந்து, "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" எனக் கூறுகிறது. மனுஷியின் நோக்கம் மனுஷனுடைய துணையாக இருப்பதே ஆகும். சமுதாயத்தின் மிக அடிப்படை அமைப்பான குடும்பங்களை உருவாக்கவே மனுஷனையும் மனுஷியையும் தேவனாகிய கர்த்தர் சிருஷ்டித்தார். குடும்பம் அமைதியாக செயல்படுவதில் நாம்

ஒருவருக்கொருவர் உதவுகிறவர்களாயிருக்க வேண்டும். எப்படியாகிலும் மனுஷனாகவும் மனுஷியாகவும் நம்முடைய கடமைகள் வித்தியாசமானவை. இயேசு தம்முடைய கிரியையை நிறைவேற்றும் படிக்குப் பூமிக்கு வந்திருக்கையில் தேவன் பரலோகத்தில் வீற்றிருப்பது போல, ஒவ்வொருவரும் வேறுபட்ட கடமையினைக் கொண்டிருக்கிறனர், ஆகவே மனுஷனும் மனுஷியும் குடும்பத்தில் வித்தியாசமான கடமைகளைக் கொண்டுள்ளனர்.

மிருகங்கள் தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை இயற்கை சுபாவத்தின் மூலம் நிறைவேற்றுகின்றன. கற்றுக்கொள்ளக் கூடியவைகளாயிருந்தாலும் அவைகள் நாம் செய்கின்றவைகளே. எபே.5:21-23, மற்றும் 1பேது.3:1-9 போன்ற புத்தகங்கள் மனைவிகள் தங்களுடைய புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கும்படி கூறுகிறது. கீழ்ப்படிந்திருத்தல் என்பது "அன்புடனே புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருத்தல்" அல்லது "புருஷனுடைய முடிவெடுத்தலில் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தல்" என்பதாகும். பெண்களே, பிலிப்பியர்2:5-8ஐ வாசித்து பிறகு இயேசுவில் நீங்கள் கீழ்ப்படிந்து இருக்கிறீர்களா எனத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். கீழ்ப்படிதல் அடிமையாயிருப்பது அல்லது கொடுமையாக நடத்தப்படுவது என பொருள்படாது. இயேசு தம்முடைய பிதாவின் சித்தத்திற்கு அன்புடனே கூடிய கீழ்ப்படிதலோடு ஒப்படைத்தார்.

நாம் நம்மை நம்முடைய புருஷரின் ஆளுகைக்கு ஒப்படைக்கக்கடவோம். ஆம், அநேக புருஷர்கள் கிறிஸ்து சபையில் அன்புகூருகிறது போல தங்களுடைய மனைவிகளிடத்தில் அன்புகூரும் தங்களுடைய கடமையினை நிறைவேற்றுகிறதில்லை, ஆனால் இது நம்முடைய கடமையினின்று நம்மை விடுவிக்கிறதில்லை. இப்படிப்பட்ட புருஷரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு 1பேதுரு 3, "... பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்" எனக்கூறுகிறது. "... பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் ..."தீத்து2:3-5 என ஸ்திரீகளுக்குக் கூறுகிறது. ஏன்? "அப்போது தான் தேவவசனத்தை ஒருவரும் தூஷிக்க மாட்டார்கள்" கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய வசனம் தூஷிக்கப்பட ஒருபோதும் இடமளிக்காமலிருக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். நம்முடைய ஜீவியம் இந்த விருப்பத்தைப் பற்றிக்கொள்ளுகிறதா? தேவன் நம்முடைய குடும்பங்களுக்கென்று கொடுத்த மாதிரியின்படி நாம் ஒருவருக்கொருவர் வாழ்வில் உதவும்படிக்கு புருஷன், மனைவியுமாக நாம் சேர்ந்து ஜெபிக்கக்கடவோம்.

புருஷர்களே, மனைவியானவள் பலவீனப்பாண்டமாயிருக்கிறபடியினால், நீங்கள் உங்கள் மனைவிகளை அன்புடன் நடத்துவீர்களானால், அவர்கள் உங்களுடைய ஆளுகைக்கு எளிதாகக் கீழ்ப்படிந்திருப்பார்கள்.

மனைவிகளே, நீங்கள் சாராள் ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்தது போல நீங்கள் பயபக்தியோடு, அன்புகூர்ந்து உங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்தால், அவர்கள் உங்களிடத்தில் விவேகத்துடன் நடந்து கொள்வது அவர்களுக்கு எளிதாய்க் காணப்படும்.

சிந்தியுங்கள், நம்முடைய ஜீவியத்தை மேற்கொள்ளும் சாத்தானுடைய வல்லமையோடு போரிடும்படிக்கு நாம் ஒருவருக்கொருவர் உதவிசெய்கின்றவர்களாயிருக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறவர்களாக மற்றவரை குற்றப்படுத்தி நம்முடையதை நியாயப்படுத்திக் கொள்ளும்போது, சாத்தான் வெற்றி கொள்ளுகிறான். சாத்தான் உங்களுடைய குடும்பத்தைக் கட்டுப்படுத்த இடமளிக்காதிருங்கள்.

## உம்முடைய செயல்கள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்
## Great and Marvelous are Your Works

**சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே!**
**உம்முடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்,**
**ஓ பரிசுத்தவான்களின் ராஜாவே!**
**கர்த்தாவே யார் உமக்குப் பயப்படாமலும்**
**உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்?**
**நீர் ஒருவரே பரிசுத்தர்.**
**எல்லா ஜாதிகளும் வந்து**
**உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்,**
**உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின**

**-வெளி.15:3,4.**

மனுஷருடைய குமாரர்களை
தேவனுடைய குமாரர்களாக மாற்றும்படி தேவனுடைய குமாரன்
மனுஷ குமாரன் ஆனார் - Selected

ஒ ரே வ ழி

'ஒரேவழி' வேதபாடம்
The Master Course படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய்15-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள்
வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**

# நீ சிறியதாயிருந்தாலும்...

## *Though You be Little...*

*- Glory Arjunan*

இயேசு கிறிஸ்து பெத்லகேம் என்னும் ஒரு சிறிய ஊரில் பிறந்தாரென நாம் அனைவரும் அறிவோம். அந்த பெத்லகேமைப் பார்த்து தான் இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங் களுக்குள்ளே சிறிதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா.5:2). மேலும் மத்தேயு2:6-லும் கூட, "யூதேயா தேசத்தி லுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது" என்று வாசிக்கிறோம். அன்பு சகோதரிகளே, இவ்வசனத்திலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளப்போகிறோம்.



யூதேயாவிலுள்ள ஆயிரம் பட்டணங்களுக்குள்ளே சிறியதாக எண்ணப்பட்டிருந்த பெத்லகேம் என்னப்பட்ட ஊரில் தான் உலகத்தையே இரட்சிக்கவந்தவரும், தன்னைத் தான் தாழ்த்துகிறவர்களை உயர்த்த வந்தருமான இயேசு கிறிஸ்து மானிடராய் பிறந்தார். இஸ்ரவேலை ஆளுகிறவராய் புறப்பட்டு இன்று வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்தவராய் உலகத்தையே ஆளுகிறவராய் இருக்கிறார். மிகவும் சிறியதாக எண்ணப்பட்ட அந்த இடத்தில் இயேசு பிறந்தார். இந்த பிறப்பு அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது. அன்பு சகோதரியே நீங்கள் சிறியவராகவும், எல்லாராலும் ஏளனமாகவும் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கலாம், ஆனால் இயேசு உங்களிலே பிறக்கும்படிக்கு இயேசுவுக்கு நீங்கள் வேண்டும் தங்களை அழகுள்ளவர்கள் என்றும், பட்டதாரிகள் என்றும், பட்டணவாசிகள் என்றும், செல்வந்தர் என்றும், சகல ஆசீர்வாதங்களையும் கொண்டிருப்பவர் என்றும், அழகாய் ஜெபிப்பவர், நேர்த்தியாய் தேவவார்த்தைகளை வியாக்கியானம் செய்பவர், அனைத்தும் அறிந்தவர், சிறந்த பேச்சாளர், சாதுரியவான், ஞானி என்றெல்லாம் நினைத்து உங்களை சிறியவர் என்று எண்ணி எள்ளி நகையாடிக்கொண்டிருக்கிற ஆயிரம் ஜனங்கள் மத்தியிலே தேவன் உங்களை நேசிக்கிறார். ஆனபடியினாலே, "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை

அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' (யோவா.3:16). தேவன் கொண்ட அன்பினிமித்தமாகவே தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசு உலகை இரட்சகராக பிறந்து, முன்னணையிலே (Manger) அதாவது கால்நடைகள் தங்கும் இடத்தில் தாழ்மை கோலம் பூண்டவராய் கிடத்தப்பட்டிருந்தார். பாவங்களின் மிகுதியால் ஆவி, ஆத்துமா, சரீரம் போன்றவற்றில் அசுத்தமாக அருவருப்பாக துர்நாற்றம் வீசும் ஜீவியத்திலிருந்து நம்மை விடுவித்து பாவமற கழுவி சுத்திகரிக்கும்படி இயேசு பிறந்தார். அன்பு சகோதரியே, இயேசு கிடத்தப்பட்டிருந்த அந்த முன்னணையைக் குறித்து எப்போதாவது சிந்தித்தது உண்டா? இயேசுவின் பிறப்பாகிய இந்த நற்செய்தியை அறிவிக்க ஒருவேளை நீங்கள் அழகிய நறுமணம் வீசும் நாகரீகமான இடத்தையே நாடிச் செல்லுகிறீர்களா, அல்லது அப்பேர்பட்ட இடத்தில் ஊழியஞ்செய்யும் உங்கள் சகோதரிகளைக் குறித்து சிறியவராய் எண்ணுகிறீர்களா? இதை வாசிக்கிற அன்பு சகோதரியே, நீங்கள் அழிந்து போகக்கூடிய இவ்வுலகில் நாகரிகத்தின் உச்சியில் இருந்தால், "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத்.18:10) என்று கூறும் இயேசுவின் சத்தத்திற்குச் செவிசாயுங்கள் அல்லது சிறுமையாக, எல்லோராலும் ஏளனமாக நடத்தப்பட்டு வேதனையோடே நாட்களைக் கழிப்பீர்களானால், இதோ வேதம் கூறுகிறது, "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்..'' (1சாமு.2:8) என்ற வேதவாக்கியம் உங்களைத் தேற்றக்கூடியதாய் இருக்கிறது.

அன்றைய நாளில் அன்னாள் என்ற ஒரு ஸ்திரீ வாழ்ந்து வந்தாள். "கர்த்தர் அவளுடைய கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்'' (1சாமு.1:6) அவள் மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள். கர்த்தர் அவளுடைய விண்ணப்பத்திற்கு செவிசாய்த்து அவள் ஒரு குமாரனைப் பெற்றெடுக்க அநுக்கிரகம் பண்ணினார். அவன்தான் கர்த்தருடைய பெரிய வேலையைச் செய்த சாமுவேல் தீர்க்கதரிசி! அன்பு சகோதரியே, நீங்கள் ஏதோ ஒரு சூழ்நிலையில் சிறியவராகவும், ஏளனமாகவும் நடத்தப்பட்டு மிகவும் விசனப்பட்டுக் கொண்டிருக்கலாம்? அற்பமாக கருதப்படுகிற உங்களை தேவன் நேசிக்கிறார். பலவீனமாயிருக்கிற உங்களை பலமுள்ளவராகிய தேவன் நேசிக்கிறார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி பலவினமான உங்களைத் தெரிந்துகொண்டார். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி ஞானத்தில் குறைவுள்ளவர்களான பைத்தியமானவர்களைப்போல் கருதப்படும் உங்களைத் தேவன் தெரிந்து கொண்டார். "உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவை

களையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்" (1கொரி.1:28) என வாசிக்கிறோம். கர்த்தருக்குள்ளான சகோதரிகளே, கர்த்தரை மகிமைப்படுத்துங்கள், கர்த்தரை அறிவியுங்கள்.

சீரியா தேசத்திற்கு ஒரு இஸ்ரவேல் பெண் அடிமையாகக் கொண்டு போகப்பட்டாள். அங்கு நாகமான் என்ற படைத்தலைவன் வீட்டில் வேலைக்காரியாக பணிவிடை செய்து கொண்டுவந்தாள். அந்த வேலைக்காரியின் மூலம் அந்நாட்டிற்கே இரட்சிப்பு வந்தது. இச்சம்பவத்தினை 2இராஜாக்கள் 5-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இஸ்ரவேல்தேசத்திலிருந்து சிறைக் கைதியாக பிடித்துக் கொண்டு போகப்பட்ட இந்த சிறுபெண் தன் அடிமைத்தனத்தையோ, சிறையிருப்பையோ எண்ணி தன்னைதானே வேதனைக்குள்ளாக்கிக் கொள்ளவில்லை. தன் எஜமானியின் கீழ் அவள் எவ்வாறு இருந்தாள் என்பது நமக்குத் தெரியாது, ஆனால் அவளோ தன் அடிமைத்தனத்தையும் எண்ணாது கர்த்தருடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துகிறாள். சகோதரிகளே, நீங்கள் உங்களுடைய சிறுமையை எண்ணி வருந்தாமல் கர்த்தரை நினைத்து மகிமைப்படுத்துங்கள். கர்த்தராகிய இயேசு தம்முடைய சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8), அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார், அவர் எண்ணப்படாமற்போனார் (ஏசா.53:3). ஆனால் தேவன் அவரை உயர்த்தினார். அவரால் இவ்வுலகிற்கு இரட்சிப்பு வந்தது.

நீங்கள் வசிக்குமிடத்தில், வேலை ஸ்தலத்தில், ஆயிரம் ஜனங்களுக் குள்ளே சிறியவர்களாய் காணப்படலாம். ஆனால் ஆயிரங்களுக்குள்ளே சிறியதாய் காணப்பட்ட பெத்லகேமிலேதான் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுடையவர் பிறந்தார். அவராலே உலகத்திற்கு பாவத்திலிருந்து விடுதலையும், சமாதானமும் உண்டாயிருக்கிறது. நீங்கள் உங்களுடைய சிறுமையை எண்ணி சோர்ந்து போகாமல் உங்கள் மூலம் இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு அறிவிக்கப்பட உங்களை அவருக்கு அர்ப்பணியுங்கள். அவர் உங்களை உயர்த்துவார். அவர் உங்கள் மூலம் மகிமைப்படுவார்.

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" –பிலிப்பியர்4:19.

**ஆசிரியர் கடிதம்**

வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்கள். ஒன்றுக்கு மேற்பட்ட இதழ் உங்களுக்கு வருமானால் தெரியப்படுத்துங்கள். உங்களுடைய ஜெபக்குறிப்புகளை எழுதிஅனுப்புங்கள். மணியாடர் அனுப்புகிறவர்கள் உங்களுடைய Ref.No.ஐ எழுத மறவாதீர்கள்.

மற்றவர்களுக்கும் இவ்விதழை கொடுத்து கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

அன்புடன் ஆசிரியர்

பகுதி -6
UNIT

## சிறுவர்களுக்காக...
## Especially For Kids

★ உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது - மத்தேயு10:30
But the very hairs of your head are all numbered - Matthew10:30

★ அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது - ரோமர்10:11
For the scripture saith, Whosoever believeth on Him shall not be ashamed - Romans10:11

★ ஆராய்ந்து முடியாத பெரியகாரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார் - யோபு9:10
He does great things past finding out. Yes, wonders without numbers - Job9:10

★ நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்: இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம் - சங்கீதம்37:39
But the salvation of the righteous is from the Lord;
He is their strength in the time of trouble - Psalm37:39

★ கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம்,
போதகசிட்சையே ஜீவவழி -நீதிமொழிகள்6:23
For the commandment is a lamp, And the law is light; Reproofs of instruction are the way of life -Proverbs6:23



### கேள்வி - Question

1. "சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்றவன் யார்?
அ)ஆதாம் ஆ)நோவா இ)சாமுவேல்
who answered "speak, for your servant hears"?
A)Adam B)Nova C)Samuel


2. யாக்கோபின் முதல் மகன் யார்? அ)ரூபன் ஆ)சவுல் இ)சாலொமோன்
Who was the first son of Jacob?A)Reuben B)Saul C)Solomon

3. கழுகுகளைப்பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப் பார்க்கிலும் பலமுமுள்ளவர்களாயிருந்தவர்கள் யார்? அ)பேதுரு, பவுல் ஆ)யாக்கோபு, யோவான் இ)சவுல், யோனத்தான்
Who were swifter than eagles and stronger than lions? A)Peter, Paul B)James, John C)Saul, Jonathan

4. மனங்கசந்து அழுத அப்போஸ்தலன் யார்? அ)பேதுரு ஆ)யோவான் இ)மத்தேயு
Which Apostle wept bitterly? A)Peter B)John C)Matthew

5. எந்த நாளில் அப்பம்பிட்கும்படியாக சீஷர்கள் கூடிவந்தார்கள்? அ)பெந்தெகொஸ்தே நாளில் ஆ)வாரத்தின் முதல்நாளில் இ)இடைப்பட்டநாளில்
In which day apostles were gathered to break bread?
A)The day of Pentecost B)The Firstday of the week C)Week days

### CHORUSES



இயேசுவின் பின்னே போக துணிந்தேன் –3
பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான் –2
உலகம் என் பின்னே சிலுவை என் முன்னே –3
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான் –2

I have decided to follow Jesus -3
No turning back, no turning back -2
The world behind me, the cross before me -3
No turning back, no turning back -2

சரித்திர ஆய்வு

# “நீங்கள் தேவர்கள்”

John S.Nathan.
Gospel Minister
Mobile: 94444 43378

“... உன்னதமானவரின் மக்கள்...” சங்.82:6

## “Ye are gods”

“Children of the most High” Ps.82:6

**நாம்** பாவம் செய்யாத போதும், ஆதாமின் மீறுதலினால் நம்மீது பாவம் திணிக்கப்பட்டது போலவே, நீதிசெய்யாத நாம், கிறிஸ்து நமக்காக பாவத்தை சிலுவையில் சுமந்து, பாவத்திற்கும், மரணத்திற்கும் காரணமான சாத்தானை வென்றபிறகு, அவன் நம்மிடத்திலிருந்து திருடின (யோவான்10:10) **நித்திய ஜீவனை,** உலகில் படைக்கப்பட்ட எல்லாவற்றின் மீதும் நமக்களிக்கப்பட்ட சகல அதிகாரங்களும் கிறிஸ்துவின் கிருபைவரத்தினாலும் நாம் **நீதிமான்களாக்கப்பட்டோம்.** இனி எனக்கு எவ்விதமான ஆக்கினை தீர்ப்பும் இல்லையே! எப்படியெனில் “இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே விசுவாசிக்கிற **எவர்களுக்குள்ளும்** எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமேஇல்லை” ரோ.3:22. ஆதாமின் கீழ்ப்படியாமையினால் பாவம் செய்யாதவர்களின் மீது பாவம் சுமத்தப்பட்டது போன்று நீதி செய்யாத நம்மீது கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் சம்பாதித்த நீதி, நம்மீது ஈவாக கொடுக்கப்பட்டது! (சுமத்தப்பட்டது). (இயேசுகிறிஸ்துவின்) தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் **சகலமும்** நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்”. குமாரன் அநேக சகோதரர்களுக்குள்ளே **முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு,** தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்... அவர்களை **நீதிமான்களாக்கியுமிருக்கிறார்...**” ரோம.8:28-30. மேலும் இப்பொழுதும் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? நம்மை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கிறவன் யார்? (வசனம் 31,34). பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று, என்னை வஞ்சித்தது (சாத்தானும் வஞ்சித்தான் ஆதி.3:13) அதினாலே என்னைக் கொன்றது” (ரோமர் 7:11). “கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய **ஆவியின்** பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று **விடுதலையாக்கிற்றே.** “....ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் இத்துடன் இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு செல்லுவதற்கு முன்பு நமக்கு தந்தருளின **எல்லா நித்தியமான** சமாதானம், சந்தோஷம் மற்றும் எல்லாவற்றின்மீதும் ஆளுகை செய்யும் அதிகாரங்கள் நமக்களிக்கப்பட்டுள்ளதால் (ஆக்கினைதிர்ப்புக்குட்பாடாத) நீர் கிறிஸ்துவிற்குள்ளிருக்கும் **புதிய சிருஷ்டி!** நீதிமான்கள், விசுவாச ஜெபத்திலே எவைகளை கேட்கிறீர்களோ அவற்றை எல்லாம் பெற்றுக் கொள்ளும் அரசிளங்குமாரர்கள் / அரசிளங் குமாரத்திகள் (Prince and Princess) இயேசு சென்ற இடமெல்லாம் சிறுபிள்ளைகளை அவர்தொட்டு

ஆசீர்வதித்தார். ஆனால் அவரின் சீடர்களோ இது ஒரு வீணான செயலென எண்ணி அவர்களை தடை செய்தார்கள் (மாற்.10:13,16). இது போன்றுதான் இன்றுள்ள சில தேவ ஊழியர்களில் சிலர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறுங்கள் நாம் **பாவிகள்** தான் என்றும் பிரசங்கித்து உங்கள் மீது பாவி என்னும் முத்திரையை தொடர்ந்து குத்திக் கொண்டே இருக்கிறார்கள். உங்களின் நலமான வளமான வாழ்விற்கு ஜெபித்திட போதாததுக்கு காணிக்கை அனுப்பி ஆசீர்வாதத்தை, சுகத்தை, நீர் விரும்புகிறவைகளை பெற்றுக்கொள்ளுங்கள். தான் ஜெபித்து அனுப்பிய எண்ணெய்யை பூசி குணமாகுங்கள், உங்கள் சரீரத்திலே எங்கே வலி, வேதனை உண்டோ அங்கே உங்கள் கரங்களை வைத்துக்கொள்ளுங்கள், உங்களின் நோய்களுக்காக டிவி போதகர் நான் கண்ணீரோடும் பாரத்தோடும் ஜெபிக்கும்போது நீங்கள் பரிபூரணமாய் குணமாவீர்கள் என்றும் அவ்வாறு பரவசத்தால் உணர்ச்சி வயப்பட்டு (Emotion) குணமாக்கப்பட்டவர்களை மேடைக்கு அழைத்து அவர்கள் பெற்ற சுகத்தைக்குறித்து சாட்சியாக மிகைப்படுத்தி கூறச்செய்து, அதனை படம்பிடித்து TV- யில் வெயிடுவது. தேவனை மகிமைப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களின் போதகர்களை மகிமைப்படுத்துகிறார்கள். உங்களுக்காக உங்கள் போதகர் ஜெபிக்கும் ஜெபத்திற்கு பதிலாக, **இலவசமாக** நீங்கள் என் (இயேசுவின்) நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன் என்றார் (யோவா.14:13). "**நீங்கள்** (மற்றவர்கள் அல்ல) ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் **பெற்றுக்கொண்டோம்** (பெற்றுக்கொள்வோம் அல்ல) என்று விசுவாசியுங்கள் அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் (மாற்.11:24) நீங்கள் ஜெபிக்க விரும்பும் போதெல்லாம் பிசாசு அதனை தடைசெய்கிறான். அது அவனுக்கு பிரியமுமில்லை, ஆகையால், வேறொருவர் உங்களுக்காக ஜெபிக்கும்படி கூறுகிறீர்கள். ஆனால் இயேசு உங்களின் ஜெபத்தைக் கேட்க நீங்கள் கேட்டதை எல்லாம் உங்களுக்கு **கொடுக்க மிகவும் பிரியமாய் இருக்கிறாரே!**

நாம் **தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்** சாட்சி கொடுக்கிறார், எனவே நாம் அவரை **அப்பா, பிதாவே** என்று அழைக்கும்படியான தைரியத்தை, சிலாக்கியத்தை பெற்றிருக்கிறபடியால் திரும்பவும் நாம் பயப்படவேண்டாம் ரோம.8:14-16. ...எல்லாம் உங்களுடையதே 1கொரி. 3:21.

கிறிஸ்துஇயேசு சிலுவையில் தன் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்ததெல்லாம், அவருக்குச் சொந்தமானதெல்லாம் **உனக்கு** கொடுத்துவிட்டாரே, உனக்குச் சொந்தமானவைகளை அனுபவிக்க யாரும் தடைசெய்ய முடியாது. ஆகையால் அவர் அளித்த எல்லா சுதந்தரத்தையும், மகிமையையும், மேன்மையையும் மற்றெல்லா நன்மைகளையும் அனுபவிக்க நீரும் அவருடைய **தேவபிரபு தான்!** சொந்தமான **தேவபிரபு** தான்! வாருங்கள் அவருடன் அளுகை செய்யலாமே.

சிறுவர் பகுதி

# தங்களைத் தீட்டுப்படுத்தாதபடி பாதுகாத்துக்கொண்ட நான்குபேர்

*வேதவாசிப்பு: தானியேல் 1:1-21*



நேபுகாத் நேச்சார் என்ற ராஜா இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டுவரவும், அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக் கொடுக்கவும் ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான். ராஜா, தான் உண்ணும் போஜனத்திலேயும் தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்றுவருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டளையிட்டான்.

அவர்களுக்குள்ளே யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு மற்றொரு பெயர், பெல்தெஷாத்சார், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ. தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார். ஆகையால் தானியேல் பிரதானிகளின் தலைவனை நோக்கி பத்துநாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும்; எங்களுக்கு புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும்; பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான். அந்தப்படியே சோதித்துப்பார்த்தபோது இவர்களுடைய சரீரம் புஷ்டியுள்ளதாக இருந்தது. மேலும் ராஜசமூகத்தில் நிற்கும்போது ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.

அன்பான தம்பி தங்கைகளே, நீங்களும் வருங்காலங்களில் இந்த நான்குபேரைப்போல உங்களை தீட்டுப்படுத்தாது பாதுகாத்துக் கொள்வீர்கள் என்றால் உங்களுக்கும் தேவன் ஞானத்தையும் புத்தியையும் தந்தருளுவார்.

**மனப்பாட வசனம்**

**"கர்த்தர் ஞானத்தை தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" நீதிமொழிகள் 2:6.**

# வேத அறிவுப் போட்டி எண்: 118

ாட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா ால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி னுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் ாந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக ழுதவும்.

1. யோசியா ராஜாவின் நாட்களில் எருசலேமின் இரண்டாம் வகுப்பிலே குடியிருந்த நீர்க்கதரிசியானவளுடைய பெயர் என்ன?
2. அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறவர்கள் யார்?
3. எவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள்?
4. புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்கும் என்று அறிந்து அவைகளுக்கு எப்படியிருக்கவேண்டும்?
5. பெலிஸ்தர் எவைகளைவிட்டு ஓடிப்போனார்கள்? அவைகளை தாவீதும் அவனுடைய மனுஷரும் அவைகளை என்ன செய்தார்கள்?
6. சிலர் சாத்தானை பின்பற்றி என்னவானார்கள்?
7. பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர் என்ற தாசன் யார்?
8. அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகலவல்லமையோடும் அடையாளங்களோடும், எப்படிப்பட்ட அற்புதங்களோடும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும்?
9. மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் கர்த்தருக்கு எப்படிப்பட்டவர்கள்?
10. எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், எப்படிப்பட்ட நிச்சயத்தோடும் வந்தது என்கிறார் பவுல்?



Bro. M. MAYANDI, Preacher,
Church of Christ,
191, Thenyavalasu Road,
Thoppupalayam P.O.
Perundurai-638 052.
ERODE DISTRICT. Cell: 9629810828.



Website: www.thewordofchristindia.com

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted at Batlagundu Post Office on 10th June. 2010



BAPTISM OF RAJALAKSHMI & ESTHER

**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை
SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்

**உங்கள் தொலைக்காட்சியில்**

**TAMILAN TV**
EVERY Monday 6.00 - 6.15 a.m
**IMAYAM TV**
EVERY Wednesday 6.30 - 6.45 a.m

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in

*Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA